# யூலை – 09 – செவ்வாய்

### புனிதர்களான அகஸ்டின் ஜாவோங்கு மற்றும் தோழர்கள்

### “அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு” மத்.3:7

-----------------------------------------------------------------

## முதல் வாசகம் தொடக்க நூல் 32 : 22 – 32

யாக்கோபு எழுந்து, தம் இருமனைவியரையும் இரு வேலைக்காரி களையும் புதல்வர் பதினொருவரையும் அழைத்துக்கொண்டு யாபோக்கு ஆற்றின் துறையைக்கடந்தார். அப்படி அவர்களை ஆற்றைக் கடக்கச்செய்தபோது, தமக்கிருந்த அனைத்தையும் அனுப்பிவைத்தார் யாக்கோபு மட்டும் இவ்வாறு தனித்திருக்க, ஓர் ஆடவர் பொழுதுவிடியுமட்டும் அவரோடு மற்போரிட்டார். யாக்கோபை வெற்றிகொள்ள முடியாதென்று கண்ட அந்த ஆடவர் அவரது தொடைச்சந்தைத் தொட்டார். யாக்கோபு அவரோடு மற்போரிடுகையில் தொடைச்சந்து இடம் விலகியது. அப்பொழுது ஆடவர் "என்னைப் போகவிடு பொழுது புலரப்போகிறது" என, யாக்கோபு, "நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போகவிடேன்" என்று மறுமொழி சொன்னார். ஆடவர், "உன் பெயர் என்ன?" என, அவர் "நான் யாக்கோபு" என்றார். அப்பொழுது அவர், "உன்பெயர் இனி யாக்கோபு எனப்படாது, "இஸ்ரயேல்" எனப்படும். ஏனெனில், நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்" என்றார். யாக்கோபு அவரை நோக்கி "உம் பெயரைச் சொல்லும்" என்றார். அவர் "என் பெயரை நீ கேட்பதேன்?" என்று, அந்த இடத்திலேயே அவருக்கு ஆசிவழங்கினார். அப்பொழுது யாக்கோபு, "நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப்பிழைத்தேன்" என்றுசொல்லி, அந்த இடத்திற்குப் "பெனியேல்" என்று பெயரிட்டார். அவர் பெனியேலுக்கு அப்பால் சென்றவுடன் கதிரவன் தோன்றினான். தொடை விலகியதால் அவரும் நொண்டி நொண்டி நடந்தார். அதன்பொருட்டு, இஸ்ரயேலர் இந்நாள்வரை தொடைச் சந்துச் சதைநாரை உண்பதில்லை. ஏனென்றால், அந்த ஆடவர் யாக்கோபின் தொடைச் சந்துச் சதைநாரைத் தொட்டார்.

**பதில்பாடல் :** நானோ நேர்மையில் நிலைத்திருந்து உமது முகம் காண்பேன்.

## நற்செய்தி : மத்தேயு 9 : 32 – 38

அக்காலத்தில் பேய் பிடித்துப் பேச்சிழந்த ஒருவரைச் சிலர் அவரிடம் கொண்டு வந்தனர். பேயை அவர் ஓட்டியதும் பேச இயலாத அவர் பேசினார். மக்கள் கூட்டத்தினர் வியப்புற்று, "இஸ்ரயேலில் இப்படி ஒருபோதும் கண்டதில்லை" என்றனர். ஆனால் பரிசேயர், "இவன் பேய்களின் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான்" என்றனர். 'இயேசு நகர்கள், சிற்றூர்கள் எல்லாம் சுற்றிவந்தார். எங்கும் அவர்களுடைய தொழுகைக்கூடங்களில் கற்பித்தார் விண்ணரசைப்பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார் நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார். திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவுகொண்டார் அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப்போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள். அப்பொழுது அவர் தம் சீடரை நோக்கி, "அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" என்றார்.

**தியானம்:** முதல் வாசகத்தில் யாக்கோபு இறைவனோடு போராடுகிறார். இரவு முழுவதும் போராடி யாக்கோபு இறுதியில் கடவுளின் ஆசீரைப் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வானது நாமும் இடைவிடாத செபத்தின் வழியாக கடவுளோடு உறவாட வேண்டும் என்பது இங்கு நினைவுபடுத்தப்படுகின்றது. அதுமட்டுமல்ல அங்கு கடவுளின் வல்லமையையும் காண்கின்றோம். அவ்வாறே நற்செய்தியிலும் இறைமகன் இயேசுவின் கருணையையும், அவரது வல்லமையும் வெளிப்படுவதைக் காண்கின்றோம். நோயாளர்களையும், உடல் ஊனமுற்றவர்களையும் இயேசு குணமாக்குவதைக் கண்ட மக்கள் பிரமித்துப் போகின்றார்கள். இருந்தாலும் மதத்தலைவர்கள் அவர் பேயின் தலைவனைக் கொண்டு பேய் ஓட்டுகின்றார் என்று குற்றம் சாட்டி புறக்கணித்து விடுகிறார்கள். இயேசுவும் மதத் தலைவர்களின் பிடிவாத்தைப் போக்க அவரோடு போராடினார் யாக்கோபுவின் போராட்டத்தை ஓர் அடையாளமாக கொண்டு நாமும் கடவுளோடு செபத்தினூடாக போராட வேண்டாமா? யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட்டவர். இஸ்ராயேல் என புதிய பெயரைப் பெற்றார். எமது திருமுழுக்கின் போது புதிய பெயர் ஓர் அடையாளமாகக் வழங்கப்பட்டு ஆண்டவரின் அறுவடைப் பணியாளர்களாக அழைக்கப்பட்டுள்ளோம். ஆகவே தான் விண்ணரசின் நற்பண்புகளை நாம் மட்டுமல்லாது பிறரும் துய்த்துணரக்கூடிய நற்பணிகளை புரிய முன்வருவோமா?